திருவள்ளூர் நகராட்சி ஆணையர் (பொ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:– திரு.ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,

ந.க.எண்.1304/2023/எப்1, **நாள்.11.04.2025**

பொருள்: மனைப்பிரிவு – திருவள்ளூர் நகராட்சி – பெரியகுப்பம் கிராமம் சர்வே எண்.725/1 (வார்டு–D, பிளாக்–26, நகரளவை எண்.3/28) ல் 0.54 ஏக்கர் பரப்பளவில் 16 குடியிருப்பு மனைகளுக்கு – மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள இறுதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
2. அரசாணை (Ms) எண்.141, நாள்.16.07.2022.
3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி SWP/DTCP/TVLR/LAYOUT No: 01/2023 Dated.04.01.2023.
4. நகராட்சி உதவி பொறியாளர் குறிப்பு நாள்.19.03.2025.
5. நகர் மன்ற தீர்மான எண்.998, நாள்.26.03.2025.
6. இவ்வலுவலக ந.க.எண்.1304/2023/எப்1, நாள்.01.04.2025.

****

ஆணை:–

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகுப்பம் கிராமம் சர்வே எண்.725/1 (வார்டு–D, பிளாக்–26, நகரளவை எண்.3/28) ல் 0.54 ஏக்கர் பரப்பளவில் 16 குடியிருப்பு மனைகளுக்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் சாலை, வடிகால், குடிநிர் மற்றும் தெருவிளக்கு வசதி போன்ற பணிகள் G.O (Ms) No:141, dated:16.07.2022–ன் படி செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம் எனவும் பார்வை 4–ல் கண்ட நகராட்சி உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து நகராட்சிக்கு மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 5–ல் கண்டவாறு இந்நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய மனைப்பிரிவிற்குரிய கட்டணங்கள் செலுத்த மனைப்பிரிவுதாரருக்கு பார்வை 6–ல் கண்ட அறிவிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவுதாரரால் நகராட்சி கருவூலத்தில் கீழ்கண்டவாறு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	கட்டண விவரங்கள்	செலுத்தப்பட வேண்டிய தொகைகள் ரூ.	ரசீது எண்
1	மனைப்பிரிவு பராமரிப்பு பணிகளுக்காக திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத்தொகை ஏக்கர் 1–க்கு ரூ.1.00 லட்சம் (0.54 ஏக்கர்)	1,00,000/–	014/01/3/25–26/0000268, நாள்.08.04.2025
2	விளம்பரம் பலகை வைப்பு கட்டணம்	10,000/–	
3	காலி நிலத்தை குடியிருப்பு மனையாக அபிவிருத்தி செய்ய ஏக்கர் 1–க்கு ரூ.10,000/– வீதம்	10,000/–	014/01/3/25–26/0000269, நாள்.08.04.2025
4	மனை அபிவிருத்தி கட்டணம் (2185 Sq.m X Rs.5/Sq.m)	11,000/–	
5	மனை உட்பிரிவு கட்டணம் (16 மனைகள் X ரூ.1000 மனைக்கு)	16,000/–	
6	ஆய்வு கட்டணம்	10,000/–	
7	சாலை அங்கீகாரக் கட்டணம்	10,000/–	
8	கொடி நாள் கட்டணம்	10,000/–	
9	காலிமனை வரி	தற்போது வரை செலுத்தப்பட்ட ரசீது இணைக்கப்பட்டுள்ளது.	
மொத்தம்		1,77,000/–	

எனவே, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் அவர்களின் தொழில்நுட்ப உத்தரவில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள இதன் மூலம் உத்தரவு அளிக்கப்படுகிறது. மேலும் தவறான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டு இவ்வுத்தரவு பெறப்பட்டு இருப்பின் நிபந்தனை இன்றி மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மேற்காணும் மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை திருவள்ளூர் அவர்கள் மூலம் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு தொழில்நுட்ப அனுமதியில் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை மீறாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2, நாள்.20.01.2022 புதிய மனைப்பிரிவுகளுக்கு அனுமதி அளிக்க பின்பற்றப்பட்ட வேண்டிய திருத்திய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.
3. தற்போது தங்களுடைய மனைப்பிரிவிற்கான மனைகளுக்கு காலிமனை வரி தங்கள் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. தாங்கள் மேற்கண்ட மனைப்பிரிவில் விற்கப்படும் ஒவ்வொரு மனைக்கும் காலிமனை வரி மனை உரிமையாளர்களின் பெயரில் மாற்றம் செய்ய அறிவுறுத்தவும், தவறும் பட்சத்தில் தாங்களே காலிமனை வரி செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

11/4/2025

ஆணையர்(பொ),
திருவள்ளூர் நகராட்சி

11/04/25 11/04/25

பெறுநர்:-

திருமதி.G.கலையரசி,
க/பெ திரு.ஏ.கோவிந்தராஜி,
எண்.177, யாதவர் தெரு,
அம்பரிஷபுரம் கிராமம்,
அரக்கோணம் வட்டம்,இராணிப்பேட்டை மாவட்டம்.

நகல்:

1. உதவி இயக்குநர் அவர்கள்,
   நகர் ஊரமைப்புத்துறை, திருவள்ளூர்.
2. சார் பதிவாளர் அவர்கள்,
   சார் பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர்.